பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**26 02 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசிய நாடுகள் உடனான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் இஸ்ரேல் பயணம் அமைந்துள்ளது என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.
2. சட்டவிரோதமாக குடியேறுபவர்களை வெளியேற்ற மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. மத்திய அரசின் நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பாடுபட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
4. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் தொடர்பாக, ஈரான் - அமெரிக்கா இடையே மூன்றாவது சுற்று சமரச பேச்சுகள் ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது.
5. குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சீல் தேசாய் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின்மூலம், கல்வி வளர்ச்சி, கலாச்சார பரிவர்த்தனை, மீன்வளம், UPI பணப்பரிவர்த்தனை கட்டமைப்பு உள்ளிட்டத் துறைகளில் இந்தியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

அந்நாட்டின் ஜெருசலேம் நகரில் பிரதமர் திரு நரேந்திர மோடியும், இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கும் இடையே நடைபெற்ற உயர்மட்ட அளவிலான பேச்சுவார்த்தைகளுக்கு பின் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தியா — இஸ்ரேல் இடையேயான நட்புறவு பரஸ்பரம் ஆழமான நம்பிக்கையுடன் வேரூன்றி உள்ளதாக தெரிவித்தார்.

மக்களின் உணர்வுகளை மதிப்பதிலும், ஜனநாயக மாண்புகளை கடைபிடிப்பதிலும் ஒருமித்த கருத்துடன் இரு நாடுகளும் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையே நல்லுறவுகளை மேம்படுத்துவதற்கு சிறப்பு கவனம் செலுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு தாம் இஸ்ரேல் வந்ததை குறிப்பிட்ட பிரதமர், தற்போது இஸ்ரேல் மண்ணில் காலடி வைப்பது தமக்கு பெருமையளிப்பதாகவும் கூறினார்.

வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், குவாண்டம் மற்றும் கனிம வளங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் **UPI** பணப்பரிவர்த்தனை கட்டமைப்பை பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

பின்னர், பேசிய இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு, இந்தியாவும் — இஸ்ரேலும் புதுமை

கண்டுபிடிப்புகளை கொண்டுவருவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதாக தெரிவித்தார்.

தொன்மை சிறப்புமிக்க நாகரீகத்தையும், பண்பாட்டையும் இரு நாடுகளும் கொண்டுள்ளதாக தெரிவித்த திரு பெஞ்சமின் நெத்தன்யாகு, எதிர்காலத்தை திட்டமிடுவதில் இரு நாடுகளும் கைகோர்த்து நின்று செயல்படுவதாக குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

மேற்காசிய நாடுகள் உடனான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் இஸ்ரேல் பயணம் அமைந்துள்ளதாக வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

பிரதமருடன், இஸ்ரேல் சென்றுள்ள திரு மிஸ்ரி, ஜெருசலேம் நகரில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியா - இஸ்ரேல் அறிவியல் தொழில்நுட்ப ஆணையத்தை வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான அமைப்பாக உயர்த்த பிரதமர் திரு நரேந்திர மோடியும், இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவும் முடிவெடுத்துள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் **Speaker of the Knesset** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியதற்காக பிரதமர் திரு மோடிக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் இந்த உயரிய கௌரவத்தை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நீர் மேலாண்மை, விவசாயம், தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தியதாகவும் திரு மிஸ்ரி தெரிவித்தார்.

ஜெருசலேமில் **Holocaust** துயர சம்பவத்தில் உயிரிழந்தோர் நினைவிடத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தியபின் அங்கு நடைபெற்ற பிரார்த்தனையிலும் பங்கேற்றார்.

இஸ்ரேலிய அதிபர் ஐசக் **Herzog**-வுடன் பிரதமர் முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டதாகவும், திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாட்டில் சட்டவிரோதமாக குடியேறும் அனைவரையும் வெளியேற்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் **Araria**-வில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், சட்ட விரோதமாக இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சீமான்ஞ்சல் எல்லைப் பகுதியில் இது தொடர்பான சோதனை நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆதார் மையங்களை கூகுள் வரைபடத்தில் இடம்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு ஆதார் சேவைகளை எளிதில் பெற வழிவகை ஏற்படும்.

<<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஒருநாள் பயணமாக இன்று ஜார்கண்ட் சென்றுள்ளார்.

ராஞ்சி விமான நிலையத்தில் ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்குவார், முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரேன் ஆகியோர் குடியரசுத் தலைவரை வரவேற்றனர்.

அங்கிருந்து, ஹெலிகாப்டர் மூலம் ஜம்ஷெட்பூர் சென்ற குடியரசுத் தலைவர், **Kadma-**வில் உள்ள ஸ்ரீ ஜெகன்நாதர் ஆலயத்தில் நடைபெற்ற பூமி பூஜையில் கலந்துகொண்டார்.

பின்னர், டாடா மருத்துவக்கல்லூரியில் மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

குடியரசுத் தலைவர் வருகையையடுத்து ஜார்கண்ட் மாநிலத்தில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கு சென்றடையும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

கர்நாடகா மாநிலம் சிவ்மோகாவில் உள்ள ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் **10** கிலோவாட் திறன் கொண்ட பண்பலை டிரான்ஸ்மீட்டரை அவர் திறந்துவைத்து பேசினார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள புதிய பண்பலை டிரான்ஸ்மீட்டர் சிவ்ஹோமா, பத்ராவதி பகுதியில் உள்ள மக்கள் பயன்பெறுவர் என்று கூறினார்.

அரசின் நலத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள், மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் இந்த பண்பலை மூலம் ஒலிபரப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசு ஊடகங்களின் கட்டமைப்புகளை நவீன மயமாக்குவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு **2** ஆயிரத்து **500** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஒலிபரப்பு கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கு தேவையான அனைத்துப் பணிகளும் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

**Podcast** உள்ளிட்ட இணையதள சேவைகளையும் ஆகாஷ்வாணி தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பண்பலை மற்றும் மின்னணு தகவல் தளங்கள் மூலம், உடனுக்குடன் தகவல்களை அளிப்பதில் பிரசார் பாரதி சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் டாக்டல் எல். முருகன் கூறினார்.

கர்நாடகா மாநிலத்தில் பெங்களூரு, மைசூரு, தார்வாட் வானொலி நிலையங்களில் உள்ள பழைய டிரான்ஸ்மீட்டர்கள் மாற்றி நிறுவப்படும் என்றும் அவர் கூறினார்.

மக்கள் கூடும் பூங்காக்களில் வானொலி பெட்டி சேவையை ஊக்குவிப்பதற்கான முன்னோடித் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

படைப்பாற்றல் பொருளாதாரத்துக்கு உத்வேகம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய டாக்டர் எல். முருகன், நாடு முழுவதும் **15** ஆயிரம் பள்ளிகளில் படைப்பாற்றலை

ஊக்குவிப்பதற்கான ஆய்வகங்கள் நிறுவப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு ரயில்வே திட்டங்களை மேம்படுத்த ரயில்வே அமைச்சருடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து குவாலியர், குணா, சம்பல் பகுதிகளுக்கு ரயில் சேவைகளை தொடங்க வலியுறுத்தியதாக தெரிவித்துள்ளார்.

மேலும், பல்வேறு விரைவு ரயில்கள், சம்பல் பகுதியில் உள்ள ரயில் நிலையங்களில் நின்று செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் தொடர்பாக, ஈரான் - அமெரிக்கா இடையே மூன்றாவது சுற்று மறைமுக சமரச பேச்சுக்கள் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வருகிறது.

இம்மாத தொடக்கத்தில் நடைபெற்ற இரண்டு சுற்று பேச்சுக்களில் ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு **Abbas Arachy** தலைமையிலான குழுவும், அமெரிக்காவின் சிறப்புத்தூதர்கள் **Steve Witkoff, Jared Kushner** இடையே நடைபெற்றது.

ஓமன் நாட்டு அமைச்சர் **Albusaidi** பங்கேற்று சமரச நடவடிக்கையில் ஈடுபட்டார்.

<<<<<<<>>>>>>

சாலை பாதுகாப்புக்கு அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டுவருவதாக மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதுதொடர்பான தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து லட்சம் சாலை விபத்துகள் மூலம் ஒரு லட்சத்து **80** ஆயிரம் பேர் உயிரிழப்பதாக கூறினார்.

சாலை விபத்துகளை தவிர்க்க அரசு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பல்வேறு சாலை மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வாகன கட்டுப்பாடு உலகளாவிய சாலை பாதுகாப்பு சட்டங்களுக்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் **Raahat** திட்டத்தின்கீழ், சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வரையிலான சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

குருகிராமில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சீல் தேசாய் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-2** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Yashaswini Panwar-**ஐ வென்றார்.

<<<<<<<**END**>>>>>>